நேரு சர்க்காரின் போக்கு சரியல்ல!

REGD. No. M. 6311 PHONE No. 55630

நம் நாடு

தி. மு. கழகத்தின் இதழ் ஆசிரியர் அண்ணாதுரை

The "Nam Nadu": A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F

தனி இதழ் : ஒரு அணா	சென்னை : ஆவணி 4உ வெள்ளி (20—8—54)	மலர் : 2
இலங்கையில் 10 சதம்	வெளியூர் : ஆவணி 5உ சனி (21—8—54)	இதழ் : 58

எதிர் கட்சிகள் கூட்டணி

போர்ச்சுகீசிய இந்தியக் கொள்கையில் நேருவின் பலவீனம்

ஆங்கிலோ, அமெரிக்க கெடுபிடிக்கு நேரு பணிகிறார்

பாராளுமன்றக் கூட்டத்தில் ஒன்றுதிரண்ட எதிர்ப்பு காட்டப்படும்

காமன்வெல்த் உறவு கண்டிக்கப்படும்

காங்கிரசாரே நேருவின் போக்கை எதிர்ப்பார்களா?

★

இந்தியப் பாராளுமன்றத்தில் உள்ள எதிர்க்கட்சிகள் அனைத்தும் ஒன்றுசேர்ந்து, கடந்த 15-ந் தேதியன்று போர்ச்சுகீசிய எல்லைக்குள் நுழையக் கூடாது என்று கோவா விடுதலைத் தொண்டர்களைத் தடுத்து நிறுத்திய இந்திய சர்க்காரின் போக்கைக் கண்டிக்க இருக்கின்றன என்று தெரிகிறது.

ஆகஸ்டு 26-ந் தேதி நடைபெறும் வெளிநாட்டுக் கொள்கை விவாதத்தின்போது எதிர்க் கட்சிகள் தங்கள் எதிர்ப்பைக் காட்டும் என்று தெரிகிறது.

அதற்கு முன்னரே போர்ச்சுகீசிய இந்தியப் பிரச்சினையில் தங்கள் எதிர்ப்பைத் தெரிவிக்க சந்தர்ப்பத்தை எதிர்பார்க்கிறார்கள் என்று தெரிகிறது.

இந்திய மக்களின் தேசிய எழுச்சிக்கு எதிராக ஆங்கிலோ—அமெரிக்க கெடுபிடிக்கு இந்திய சர்க்கார் இணங்கி விட்டதென்றும் இந்தப் பலவீனமான போக்கு சரியல்லவென்றும் தோழர் ஏ. கே. கோபாலன் அறிக்கையொன்று வெளியிட்டிருக்கிறார்.

1,200 தொண்டர்களுடன் கோவாவில் நுழைய முயற்சித்து இந்திய சர்க்காரால் தடுக்கப்பட்ட சவுள்கர் தோழர், இந்திய சர்க்காரைக் கண்டிக்க எதிர்க் கட்சிகள் தயார் செய்யும் எதிர்ப்பு முகாமைப் பயன்படுத்திக்கொள்வார் என்று தெரிகிறது.

பாராளுமன்றத்தில் உள்ள ஜன சங்கம், இந்து மகா சபை உறுப்பினர்கள் தங்கள் கருத்துக்களை வெளியிடவில்லையென்றாலும் நேரு சர்க்காரின் போக்கை எதிர்ப்பதில் அவர்கள் கருத்து மற்றவர்களுடன் மாறுபடாது என்பது உண்மையாகும்.

அடிக்கடி சந்தர்ப்பம் கிடைக்கும்போதெல்லாம் இந்தியாவின் காமன்வெல்த் உறவைக் கண்டிக்கும் பிரஜா—சோஷலிஸ்டுகள் இந்த நேரத்தில் நேருவின் போக்கை எதிர்க்கும் வாய்ப்பைக் கைவிட மாட்டார்கள் என்று தெரிகிறது.

காங்கிரஸ் கட்சியினரிடையே நேருவின் போர்ச்சுகீசிய இந்தியக் கொள்கைக்கு எதிர்ப்பு இருக்குமென்று தெரிகிறது.

இந்த விடுதலைக் கிளர்ச்சி, எதிர்க்கட்சிகளிடம் சென்று விட்டது கண்டு, காங்கிரஸ்காரர்கள் பலர், நேருவின் போக்கை எதிர்க்கிறார்களாம்!

ஞாயிறு அன்று நடைபெற இருக்கும் காங்கிரஸ் கட்சி கூட்டத்தில், பண்டிதர், விடுதலைப் படையை கோவாவிற்குள் நுழையாமல் தான் தடுத்தது, விடுதலைக் கிளர்ச்சியில் தனக்கு ஆர்வம் குறைந்துவிட்டது என்பதினால் ஏற்பட்ட விளைவு அல்ல என்று எடுத்துச் சொல்வார் என்று தெரிகிறது!

அடுத்துவரும் பாராளுமன்றக் கூட்டத்தில் பண்டித நேருவின் 'வெளிநாட்டுக் கொள்கை'க்கு நல்ல நேரான எதிர்ப்பு இருக்குமென்பது உறுதி!

கிருபளானியின் குழப்பம்!

பிரஜா-சோஷலிஸ்டு தலைமையில் கருத்து வேற்றுமை

பட்டம் டில்லிக்குப் பறந்து செல்வார்

தமிழர் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்ததின் விளைவு

புதுடில்லி, ஆக. 19—

திரு—கொச்சி தமிழர்மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்ததற்காக திரு—கொச்சியில் உள்ள பி.—சோ. மந்திரி சபை இராஜிநாமா செய்ய வேண்டும் என்ற பிரச்சினையில் பி.-சோ. கட்சி தலைமைப்பீடத்தில் குழப்பமான நிலை காணப்படுகிறது.

புதன்கிழமையன்று பருக்பாத்தில் நடைபெற்ற கூட்டமொன்றில் பேசுகையில், டாக்டர் லோகியா அனுப்பியுள்ள தந்திக்கு திருப்திகரமான பதில் கிடைக்காவிட்டால், திரு—கொச்சியில் உள்ள பி.-சோ. மந்திரிசபையே இராஜிநாமா செய்யுமென்று கட்சியின் தலைவர் கிருபளானி கூறினார்; ஆனால், வியாழனன்று புதுடில்லியில் பேசும்போது கிருபளானி, மந்திரிசபை முழுமையும் இராஜிநாமா செய்ய வேண்டியதில்லை என்றும், ஒரு இலாகா தவறாக நடந்திருந்தால் அந்த இலாகா அமைச்சர் மட்டும் இராஜிநாமா செய்தால் போதும் என்றும் கூறியிருக்கிறார்.

சர்க்கார் பேரில் குற்றமா? ஜனத் திரளின்மீது குற்றமா?—என்பதைத் தீர்மானிப்பதற்காக துப்பாக்கிப் பிரயோகம் பற்றி விரிவான விசாரணை நடத்துவது அவசியம் என்றும் அவர் மேலும் கூறினார்.

சிறையில் உள்ள பி.-சோ. கட்சிக் காரியதரிசி டாக்டர் லோகியா திரு—கொச்சி முதல் அமைச்சருக்கு தந்தி ஒன்று அனுப்பியிருக்கிறார் என்று தெரிகிறது. துப்பாக்கிப் பிரயோகம் பற்றி அவர் கவலை தெரிவித்து விசாரணை கமிட்டி நியமிக்குமாறும், அதன் பின்னர் உடனடியாக இராஜிநாமா செய்யுமாறும் அவர் கோரியிருக்கிறார் என்று தெரிகிறது.

இப்பிரச்சினைப் பற்றி பி.-சோ. தலைமைக்கு லோகியா கடிதம் ஒன்று அனுப்பியிருக்கிறாராம்.

இக்கடிதம் பற்றி ஆராய பி.-சோ. கட்சியின் தலைமை உடன் கூட்டப்படுமா என்ற கேள்விக்கு, கிருபளானி பதில் அளிக்கவில்லையாம்!

"இராஜிநாமா செய்யுமாறு, லோகியா, தங்களுக்கு தாக்கீது எதும் அனுப்பவில்லை," என்று, சென்னையில், திரு—கொச்சி அமைச்சர் குஞ்சு கூறியிருக்கிறார்.

பெரிய கலவரம் நடந்தால் ஒழிய துப்பாக்கிப் பிரயோகம் செய்யக் கூடாது என்று லோகியா கூறுகிறார்; ஆனால், அசோக்மேத்தாவின் கருத்து வேறுவிதமாக இருக்கிறது.

'தமிழர்களை அடக்குவேன்; தமிழர்கள் கிளர்ச்சி நியாய மற்றது,' என்று இறுமாப்புடன் பேசிய பட்டம் தாணுவின் உள்ளத்திலும் குழப்பம் நிலவுகிறது என்று தெரிகிறது.

அவர் ஒரு வாரத்திற்குள் டில்லி சென்று நேருவிடம் நிலைமையை விளக்குவார் என்று தெரிகிறது.

இப்போது நடைபெறும் விசாரணை முடிவடைந்த பின்னர் பகிரங்க விசாரணை நடத்த, பட்டம் தாணு ஒப்புக்கொள்வார் என்று தெரிகிறது.

தூத்துக்குடி சதி வழக்கு

ஆட்சேபம் நிராகரிப்பு!

திருநெல்வேலி, ஆக. 19—

தூத்துக்குடி சதி வழக்கில் கோர்ட்டின் அதிகார எல்லை பற்றிய எதிரிகள் வக்கீல் எழுப்பிய ஆட்சேபத்தை நீதிபதி கே. என். இராதாகிருஷ்ண முதலியார் நிராகரித்துத் தீர்ப்புக் கூறினார்.

முன்கூட்டியே சர்க்கார் அனுமதி பெறாததால், இந்த வழக்கை விசாரிக்க இக் கோர்ட்டுக்கு அதிகாரமில்லை என்று எதிர்தரப்பு வக்கீல் கூறினார்.

இவ்வழக்கை விசாரிக்க இந்தக் கோர்ட்டுக்கு அதிகாரம் உண்டு என்று நீதிபதி அறிவித்தார்.

செங்கற்பட்டு மாவட்ட

தி. மு. கழக 2-வது மாநாடுகள்

காஞ்சிபுரம்

★

21—8—54 சனி:

சமூக சீர்திருத்த மாநாடு

பேசும் தலைப்புகள்:

'அருள் நெறியும், அறிவியக் கமும்' —டி. கே. தாமரைச்செல்வன்

'வரலாற்றில் காம்' —சி. பி. சிற்றரசு

'கம்பன் செய்த வம்பு' —கண்ணதாசன்

'மூட நம்பிக்கை' —ப. உ. சண்முகம்

'நாம் கண்ட வெற்றி' —அ. பொன்னம்பலனார்

'மகளிர் கடமை' —அருண்மொழி

'மறைந்த வீரர்கள்' —ஆசைத்தம்பி

'மறுமலர்ச்சி' —க. அன்பழகன்

'வள்ளுவர் வகுத்த வழி' —இரா. நெடுஞ்செழியன்

★

22—8—54 ஞாயிறு:

அரசியல் மாநாடு

சொற்பொழிவாளர்கள்:

இராம. அரங்கண்ணல்
என். எஸ். இளங்கோ
காஞ்சி-கலியாணசுந்தரம்
ஈ. வெ. கி. சம்பத்
இரா. நெடுஞ்செழியன்
தோழியர் பூங்கோதை
கே. ஏ. மதியழகன்
தில்லை-வில்லாளன்
என். தெய்வசிகாமணி, எம்.எல்.ஏ.
ஏ. கோவிந்தசாமி, ,,
எம்.பி.சுப்பிரமணியம் ,,
டி. சண்முகம் ,,
பொதுச்செயலாளர் அண்ணா

இசை:

நாகூர் அனீபா, முருகேசன்

கராச்சியில் அமெரிக்கப் பத்திரிகை பறிமுதல்

நபிக்கு ரூபம் கற்பித்ததின் விளைவு

அமெரிக்கப் பத்திரிகையான 'லைப்' என்ற ஆங்கில இதழில் ஜூன் 28-ந் தேதிய வெளியீட்டை, ஒரு பிரதியும் விடாது பறிமுதல் செய்யுமாறு கராச்சி போலீஸ் கமிஷனர் உத்தரவிட்டுள்ளதாகத் தெரிகிறது. அந்த இதழில், முகமது நபியின் கற்பனை உருவம் ஒன்று வெளியாகி இருப்பதே பறிமுதலுக்குக் காரணம் எனத் தெரிகிறது.

தெ. இ. மில் தொழிலாளருக்கு குடியிருப்பு வீடுகள்

டெல்லியின் கண் துடைப்பு!

புதுடெல்லி, ஆக. 19—

தொழிலாளருக்கு வீடு கட்டித் தரும் திட்டப்படி மத்திய அரசாங்கம், சென்னை மாநிலத்தில் உள்ள மில் தொழிலாளர்களுக்கு 186 வீடுகள் கட்டித் தருவதற்கு ரூ. 3,10,800 உதவியிருப்பதாகத் தெரிகிறது.

இதில் மதுரையில் உள்ள மீனாட்சி மில் வளவில், 144 ஒரே அறை உள்ள வீடுகளும், 16 இரண்டு அறை உள்ள வீடுகளும் கட்டுவதற்காக ரூ. 10,800 உதவியும், ரூ. 1,68,900 கடனும் மத்திய அரசாங்கம் தருமெனத் தெரிகிறது.

சிங்காநல்லூரில் உள்ள பாலசுப்பிரமணிய மில் தொழிலாளருக்கு வீடு கட்டிக் கொள்ள உதவியும் கடனுமாக ரூ. 38,9000 மத்திய அரசாங்கம் தரும் எனத் தெரிகிறது.

நம் நாடு

சென்னை 20—8—54 வெள்ளி

ஏழைகள் கட்சி!

"காங்கிரஸ் மகாசபை ஏழைகள் ஸ்தாபனம்; ஏழைகள் நலத்தைக் கவனிக்கவே தான் நாங்கள் பதவியிலிருக்கிறோம்!"—என்று, சென்ற சில நாட்களாக நாடு சுற்றி வரும் தேசியத் தலைவர்கள் பேசி வருகின்றனர்!

அரசியல் கட்சி ஒன்றை அறுபது ஆண்டுகளுக்கு மேலாக நடத்தி வரும் அன்பர்களுக்கு, தங்களுடைய அடிப்படைக் குறிக்கோள் என்னவென்று இவ்வளவு ஆண்டுகள் கழித்து விளக்கிட வேண்டிய அவசியம் வந்தது, ஆச்சரியத்திற்குரிய விஷயம்தான்!

நாட்டிலே பிர்லாக்களையும், டாடாக்களையும் துணைக்கு அழைத்துக்கொண்டு, கோயங்காக்களையும், ஜெயின்களையும் பிரச்சார இயந்திரமாக்கி, புதிய இந்தியாவின் பெருமையை பறை சாற்றும் காங்கிரஸ் தலைவர்களுக்கு; தங்களைச் சுற்றி நிற்கும் லல்லுபாய்களையும், டால்மியாக்களையும் கண்டதும், திடீர் பயம் வந்து விட்டது போலும்!

'ஒருவனைப் பற்றித் தெரிந்து கொள்ள அவனைச் சுற்றி நிற்கும் நண்பர்கள் பட்டியல் போதும்,' என்பது பழம்பெரும் வாக்கியம்!

'இன்று, காங்கிரஸ் ஸ்தாபனத்தைச் சுற்றியும், உள்ளேயும் நிற்கும் பணமூட்டைகளைக் காணும் மக்கள், தங்களைப் பற்றி தவறு கணக்குப் போட்டுக் கொள்வார்களே,' என்ற பயம், தேசியத் தலைவர்களுக்கு ஏற்பட்டு விட்டது போலும்!

இந்திய உபகண்டத்தின் பொருளாதார, தொழில் விஷயங்கள் அத்தனையையும் ஆட்டிப்படைக்கும் டாடாக்களும், பிர்லாக்களும், இன்ன பிற முதலாளிகளும் இன்று, தேசியத் தோழர்களின் ஆப்த நண்பர்கள் மாத்திரமல்ல; பல பண மூட்டைகள், காங்கிரசாகவே மாறிவிட்டனர்.

நாட்டின் ஜீவாதாரத் தொழில்களைக் கையில் வைத்திருக்கும் காரணத்தினால், இயற்கையாகவே, நாட்டினுடைய அரசியல் அரங்கத்திலும் அவர்கள் அதிகாரம் தான் நிலைக்கிறது!

சேலத்திலே துவங்கி துங்கபத்ரா நதிதீரம் வரை வைத்து நெசவாளி பட்டினியால் சாகும் போதுகூட தங்கள் மில்களின் உற்பத்தியில், சிறு மாற்றத்தைக்கூட செய்ய மறுத்துவிட்டனர், வடநாட்டு ஆலை முதலாளிகள்!

'சிறிது காலத்திற்கு வேட்டி, புடவை ஆகிய இரண்டு ரகத் துணிகளை மாத்திரம் மில்லில் நெய்ய வேண்டாம்' என்று சென்னை சட்டசபை, ஆச்சாரியார், மற்றும் எல்லா தேசியத் தோழர்களும் கூறிய போதிலும், டெல்லியிலும், அங்கே திரைமறைவில் அதிகாரம் செலுத்தும் முதலாளித்துவத்திடமும், ஒன்றும் பலிக்கவில்லை. இங்கிருந்து போன டி. டி. கிருஷ்ணமாச்சாரியை விட்டே இதற்கும் மறுப்புக் கூறச் சொன்னார்கள், டெல்லி சர்க்கார்!

இப்படி உண்மை அதிகாரத்தைத் தங்கள் கையில் வைத்துக்கொண்டு, தென்னாட்டில் ஒரு அதிகாரமுமின்றி ஏஜெண்டுகளென்ற நிலையில் மந்திரிகளாக்கப்பட்டிருக்கும் தேசியத் தோழர்கள், இன்று நம் மத்தியிலே வருகின்றனர்—'ஏழைகள் கட்சி, எங்கள் கட்சி' என்று கூறிக் கொண்டு!

ஏழை; ஏழைக்காகப் போராடுகிறோம்; ஏழைகள் கட்சி எங்கள் கட்சி—என்று கூறுவதெல்லாம், 'வரலாறு கூறும் உண்மை' யென்று தான் நம் கண்முன் வருகிறது.

உலகத்திலே எந்தக் கட்சியும், 'ஏழைக்கு' என்று கூறுவதே தவிர, 'பணக்காரனுக்கு' என்று கூறும் கட்சி இந்த இருபதாம் நூற்றாண்டில் எங்காவது உண்டா?

"நாய்கள்!" என்று மக்களைப் பழித்துரைத்து, 'மாளிகை வாசிகளின் நலனுக்கும் பாடுபடுகிறேன்,' என்று கூறிய ஆண்டான் மனப்பான்மை, பிரெஞ்சுப் புரட்சியோடு போய்விட்டது!

சென்ற இரண்டு நூற்றாண்டுகளாக உலகின் அரசியல் மேடையில் எந்த எவனும், பணக்காரனுக்கு என்று கட்சி பேசியதில்லை!

பிரெஞ்சுப் புரட்சியைக் கண்டித்த பிரிட்டிஷ் பேரறிஞன் பர்க் கூட, ஏழைக்கு தீங்கு நினைத்தவனல்ல!

நெப்போலியன் கூட, பிரெஞ்சு சாம்ராஜ்யத்தை வளர்க்கத் திட்டம் போட்டானே தவிர, பிரெஞ்சு நாட்டிலே ஏழ்மையை வளரவிட விரும்பவில்லை!

அதுவும், சென்ற நூற்றாண்டிலே மார்க்ஸின் சமத்துவக் கொள்கைகள் பரவ ஆரம்பித்தவுடன், 'ஏழை', என்பவன் அரசியல் வாதிகளுக்கும் சொந்தமாகப் பாவிக்கப்பட்டான்!

ஏழையைப் பற்றி இன்று சர்ச்சிலும் பேசுகிறார்! அட்லியும் பேசுகிறார்!

டாலர் முதலாளிகளும், ஏழைக்கும், ஏழ்மையை ஒழிப்பதற்கும்தான், தாங்கள் டாலர் நிதிகள் தருவதாகக் கூறுகின்றனர்!

மாலங்கோவும், மா - சே - துங்கும், இன்ன பிற கம்யூனிஸ்டுகளும் 'ஏழைக்குத்தான் உலகம்,' என்கின்றனர்!

இப்படி, இன்றைக்கு உலகமே ஏழைகள் மயமாக இருக்கிறது!

இந்த நேரத்திலே வருகிறார், நமது தேசியத் தோழர்—"நாங்கள் ஏழைக்கும் பாடுபடுகிறோம்!" என்று கூறிக் கொண்டு!

ஏழைக்குப் பாடுபடாதவர் யாரோ?

ஏழைக்கு, யார், எப்படிப் பாடுபடுகின்றனர் என்பது தான் கவனிக்க வேண்டிய விஷயமே தவிர, ஏழைக்கு உழைக்கிறார்களா, பணக்காரர்களுக்கு உழைக்கிறார்களா என்பதல்ல, இன்றையப் பிரச்னை!

லட்சம் லட்சமாக லாபம் சம்பாதிக்கும் ஆலை முதலாளி, உல்லாசமான நேரத்திலே, ஒய்வாகக் கடற்கரையில் உலவி, மனம் மகிழ்ச்சியடையும்போது, அரை வயிற்றுக் கஞ்சிக்கு அலையும் அன்னக்காவடிக்கு ஆயிரம் ரூபாய் கொடுத்தால், அது ஏழைக்கு உழைத்ததாகுமா?

அன்னக்காவடிகளைக் கண்டு, அவர்களுடைய வறுமையைத் தீர்க்க முடியாத நிலையில், ஆவேசத்தோடு நாடு சுற்றி, அன்னக்காவடிகளின் நிலையை நாடறியச் செய்து, என்றைக்காவது ஒரு நாள் ஏழைகளற்ற ராஜ்யத்தை உண்டாக்கப் பாடுபடுவது, ஏழைக்கு உதவியதாகுமா?

இந்த இரண்டு செயலிலும் இருக்கும் அடிப்படை வேற்றுமை, மிக முக்கியமானது!

முதல் வகை செயல், தனிப்பட்ட மனிதர்களுக்கு அவ்வப்போது வரும் இரக்கத்தையும், சில சில நேரங்களில் ஏற்படும் தந்திர எண்ணத்தையும் பிரதிபலிக்கும்!

இரண்டாவது வகை செயல் உரிமை உணர்ச்சி, மனிதாபிமானம் போன்ற நற்பண்புகளின் எதிரொலி!

இந்த அடிப்படை வேற்றுமையோடு, ஏழைக்கு உழைப்பது என்றால், எந்த முறையில் உழைப்பது என்பதும் கவனிக்கப்பட வேண்டியதாகும்!

எல்லோரும் ஏழைக்கு உழைப்பதாகத்தான் கூறுகின்றனர்; ஆனால், ஒவ்வொருவரும் தனித்தனியான வழியைக் கூறுகின்றனர்.

"எல்லா வழியும் ஓரிடம் போவது" என்று வேதாந்தம் பேசும் விஷயமல்ல இது; ஆயிரக்கணக்கான மக்களை பாதிக்கும் அரசியல்!

'ஏழைக்கு உழைக்கிறேன்' என்று கூறும் தேசியத் தோழர்கள், 'பணக்காரன் ஒரு பக்கத்திலே மூட்டை கட்டட்டும்; மற்றொரு பக்கத்திலே தொழிலாளி உறங்கட்டும்' என்று கூறுகின்றனர்!

நாட்டிலே முதலாளித்துவ தொழில் முறையை அனுமதித்திருக்கிற காரணத்தால், நாட்டின் ஒருசிலர், பணத்தைச் சேகரித்துக்கொண்டே இருக்கின்றனர்; அவர்களிடம் 'உழைப்பை'க் கொடுத்து, வயிற்றுக்குத் தேடுகிறான், ஏழைத் தொழிலாளி!

'இந்தத் தொழிலாளிக்கு, இப்பொழுது இருப்பதைவிட, இன்னும் கொஞ்சம் வசதி செய்து கொடுக்கலாம்,' என்று கூறுகின்றனர், காங்கிரஸ் தோழர்கள்!

எந்த அளவுக்கு செய்து கொடுத்தனர்; எவ்வளவு இனி செய்வர் என்பது ஒருபுறமிருக்கட்டும்.

ஓரளவு தேவையான வசதி செய்து கொடுத்தால் மாத்திரம் போதுமா? அப்பொழுதும் அவர்கள் உழைப்பை உறிஞ்சிப் பணம் சேகரிக்கும் முதலாளியும், அந்த முதலாளியால் ஏற்படும் பொருளாதார ஏற்றத் தாழ்வுகளும் இருந்துதானே தீரும்?

அதை ஒழித்து, சமத்துவ சமுதாயத்தை உற்பத்தி செய்ய, காந்திய நிபுணர்கள் வருவார்களா? அதற்கு நம்பகமான முறையில், கால வரையறையிட்ட திட்டம் உண்டா?

ஏழையின் வாழ்வு மேன்மையடைய முதல் தேவை, ஏழ்மையை உண்டாக்கிய முதலாளித்துவம் ஒழிக்கப்பட வேண்டும்!

மனிதனுக்கு மனிதன் வேற்றுமையை உண்டாக்கும் பணமும், நிலமும் பொதுச் சொத்தாக்கப்பட்டு, தனிப்பட்ட மனிதனின் உடைமை பறிக்கப்பட்டால், ஏழை - பணக்காரன், ஆண்டான் - அடிமை, நிலச்சுவான்தார் – விவசாயி என்ற எந்த பேதமும் இருக்க நியாயமில்லை!

அப்படி சமத்துவமாக்கப்பட்ட சமுதாயத்திலேகூட, ஏழை, அரை வயிற்றுக் கஞ்சியோடு காலம் கடத்த வேண்டி வரலாம், அந்தந்த தேசத்தின் வளம், உற்பத்தியைப் பொறுத்து! ஆனால், ஒருவன் உண்ண, மற்றவன் பார்க்கும் நிலையின்றி, எல்லோரும் அரை வயிறு உண்ணுவர். ஒருவேளை. தேவையான வலுவுள்ளவன், உடல் நலிந்தவனுக்குத் தன் பங்கை பகிர்ந்தளிப்பான்! என்றைக்காவது ஒரு நாள் சமுதாயம் பூராவும் தேவையான வசதியைப் பெறும்!

இந்த மனிதாபிமானமும் ஒற்றுமையும், சமத்துவமும் கூடிய சோஷலிச சமுதாயத்தை சிருஷ்டி செய்யத்தான், 'திராவிட நாடு' கேட்கிறோம்!

நம்மைப்போல, உலகத்தின் பல்வேறு பாகங்களில், இதேபோல், சமத்துவ சமுதாயம் சிருஷ்டிக்க முயற்சி செய்யப்படுகிறது.

முடிவில், உலகம், உலகத்து மக்கள் எல்லோரும் நல்வாழ்வும், முன்னேற்றமும் அடைவர் என்ற ஆவல்தான், திராவிட நாட்டை வலியுறுத்தச் சொல்கிறது!

இந்தச் சமத்துவ சமுதாயத்தை உண்டாக்க ஒன்றுபட்ட இந்தியாவில் நிச்சயமாக முடியாது!

முற்றிலும் வெவ்வேறான கலாச்சாரம் கொண்ட வெவ்வேறு இனங்களும், மொழிகளும் நிறைந்து கிடக்கும் இந்த உபகண்டத்தில், நாம் இன்னும் பத்துத் தலைமுறைக்கு முயன்றாலும், ஒன்றும் செய்ய முடியாது!

ஒரே இன மத பித்தும், குறுகிய மொழி ஆதிபத்திய எண்ணமும் கொண்ட வடவர் தற்போது தொழில் அதிபர்களுமாக ஆகின்றனர். பிற்போக்கும், அதிகார வெறியும் பிடித்தலையும் அவர்களிடம் நம் நாடு சிக்கி, வேட்டைக் காடாவதைத் தவிர, வேறெந்த வருங்காலமும் நமக்குத் தெரியவில்லை!

நம்முடைய பழக்க, வழக்க பாவனையிலே, நம் மக்களிடம் பேசி, அவர்களைச் சமத்துவப் பாதையிலே அழைத்துச் செல்வதுதான் முடியக்கூடிய காரியம்!

மற்றபடி, வலுவடைந்த முதலாளி வர்க்கம், மிகப் பரந்த உபகண்டம், மொழி ஆதிபத்திய எண்ணம் இவைகள், நிச்சயமாக மக்கள் முன்னேற்றத்தைத் தடை செய்யும்!

வட இந்தியா பூராவும் தொழிற்சாலைகள் பெருகி வருகிறது! ஒரு வேளை, நம்முடைய தேவைக்கு எல்லா சாமான்களும் அவர்களே கொடுக்கிறார்கள் என்ற நிலை ஏற்பட்டால்கூட, அந்நேரத்திலும் நாம் சுதந்திர மனிதர்களாக சமத்துவ சமுதாயத்தில் இருக்க முடியுமா என்பதைச் சிந்தித்தும் பார்க்க வேண்டும்! ஆகவே, நாடு பிரிய வேண்டியது, எந்த சீர்திருத்தத்திற்கும் முதல் தேவை!

இப்படி ஏழைக்கு வாழ்வு தேட முற்பட்டிருக்கிறோம், நாமும் ஏழை என்ற காரணத்தால்!

இந்த நேரத்தில்தான் தேசியத் தலைவர்களும் 'நாங்களும் ஏழைக்குப் போராடுகிறோம்' என்கின்றனர்!

எந்த முறையில் அவர்கள் ஏழையின் மேன்மைக்குப் போராடுகின்றனர் என்பதை நாடு பார்த்துக்கொண்டுதான் இருக்கிறது!

அவர்களுடைய ஏழாண்டு ஆட்சியில், ஏழ்மையின் மேன்மைக்காக அவர்கள் நிறைவேற்றிய திட்டங்களும் (?), சமத்துவ சமுதாயம் அமைக்க அவர்கள் செல்லும் பாதையையும் (!), மக்கள் கவனித்துக் கொண்டுதானிருக்கின்றனர்.

'ஏழைகள் கட்சி' என்று பறைசாற்றும் தேசியத் தோழர்கள், எந்த வழியில் நாட்டை அழைத்துச் செல்கின்றனர் என்பதையும், ஏழை கவனிக்காமலில்லை!

அவன் இன்று எழுந்து நின்று, தன் வியர்வையில் மிதந்து வாழ்வு நடத்துபவர்களையும், அதற்கு வசதி செய்து கொடுப்பவர்களையும் பார்க்க ஆரம்பித்துவிட்டான். அவன் பார்வையில் தெளிவு, ஆவேசம், உணர்ச்சி எல்லாம் வெளிப்படுகிறது.

'ஏழைகள் கட்சி' என்றாலும், 'ஏழைகளுக்குத்தான் போராடுகிறோம்,' என்றாலும், அவன் சமாதானமடைய மாட்டான்! நாட்டில் இருக்கும் முதலாளி—தொழிலாளி நிறைந்த சமுதாயத்தை, பேதமற்றதாக்கி விட்டுத்தான் வேறு வேலை பார்ப்பான்!

ஆகவே, இந்த முதலாளித் திருக்கூட்டத்தை பாதுகாப்பவர்கள், அறிவோடு, காலத்தின் எச்சரிக்கையையும் உணர்ந்து நடந்து கொள்ளட்டும்!

ஜனநாயகப் பண்பா?

நகர சபைகள், ஊராட்சி மன்றங்கள் என்பன, நகரங்கள், சிற்றூர்கள் இவைகளின் தேவைகளை உணர்ந்து, மக்களின் வாழ்வை வளமாக்கவே அமைக்கப்பட்டிருக்கின்றன.

சர்க்காரிடமே அதிகாரம் குவிந்து விடாமல் தடுக்கவும், தாங்கள் வாழும் பகுதிகளின் நிர்வாகத்தில் பங்கு பெற மக்களுக்கும் பயிற்சியளிக்கவும் இந்த நகராட்சி மன்றங்கள் பயன்பட வேண்டும்.

அது மட்டுமின்றி, ஜனநாயக முறைக்கு மக்களைத் தயார் செய்யவும், பாராளு மன்றம், சட்டசபை ஆகியவைகளுக்குச் செல்வோருக்கு பார்லிமெண்டரி முறைகளில் பயிற்சியளிக்கும் முதற்படியாகவும் இந்த உள்ளாட்சிக் கழகங்கள் கருதப்படுகின்றன; உண்மையும் அதுதான்!

நம்முடைய நாட்டில் உள்ள நகராட்சி மன்றங்கள் இன்னும் எவ்வளவோ முன்னேறிச் செல்ல வேண்டிய நிலையில் உள்ளன.

சென்ற செவ்வாயன்று நடைபெற்ற சென்னை நகர

(அடுத்த பக்கம் பார்க்க)

(முன் பக்கத் தொடர்ச்சி)

சபை கூட்ட நடவடிக்கைகள், நகராட்சி மன்றங்கள் எப்படி இயங்க வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறதோ, அதற்கு நேர்மாறாக, அங்கே, நிகழ்ச்சிகள் நடைபெற்றிருப்பதைக் காண்கிறோம்!

சரியான முன்னறிவிப்புடன் கூட்டப்பட்ட நகரசபைக் கூட்டம், கேள்வி நேரம் முடிந்த பின்னர், காரணமின்றி ஒத்திவைக்கப்பட்டிருப்பது, விந்தையாக இருக்கிறது!

கேள்வி நேரம் முடிந்த பின்னர் பெரும்பான்மைக் கட்சியினரின் ஒருவர், கூட்டத்தை ஒத்திவைக்க வேண்டுமென்று பிரரேபித்திருக்கிறார். அந்தப் பிரரேபணை வழிமொழியப்பட்டு நிறைவேற்றப்பட்டுள்ளது.

'ஏன் ஒத்திவைக்கப்படுகிறது? என்று எதிர்க் கட்சியினர் கேட்டபோது, பிரரேபணையை முன்மொழிந்தவரோ, அல்லது மேயரோ பதில் அளிக்கவில்லை; ஆனால், 'காரணம் ஒன்றுமில்லை' என்று எங்கிருந்தோ ஒரு குரல் கேட்டதாம்.

கூட்டத்தை ஒத்திவைக்க வேண்டுமென்ற பிரரேபணைக்கு ஆதரவாக 32 வாக்குகளும், எதிராக 17 வாக்குகளும் கிடைத்தன. 'கூட்டம் கலகத்தில் முடியாமல், சிறிதளவு அமைதியுடன் முடிவடைந்தது பாராட்டத்தக்கது' என்று செய்திகள் கூறுகின்றன.

இக்கூட்டத்திற்கு முன்பு நடைபெற்ற காங்கிரஸ் கட்சிக் கூட்டத்தில் ரெவின்யூ அதிகாரியின் நியமனம் பற்றிப் பலத்த வாக்குவாதங்களும் ஒரே குழப்பமும் நிலவியதாம். இதைப்பற்றி நாம் கவலைப்பட வேண்டியதில்லை என்றாலும், கட்சிப் பூசல்கள் நகராட்சி மன்றங்களில் தலையிடுவது தகாத செயல் என்பதை எடுத்துச் சொல்லவேண்டியிருக்கிறது.

காரணம் கூறாமல் கூட்டத்தை ஒத்திவைப்பது என்பதும், 'ஏன் ஒத்திவைக்கப்படுகிறது,' என்று எதிர்க் கட்சியினர் கேட்டபோது, நேர்மையான முறையில் பதில் அளிக்காமல், எங்கிருந்தோ, 'காரணம் ஒன்றுமில்லை,' என்று பதில் கிடைப்பதும், ஜனநாயகம் என்ற சொல் தருகிற பண்புக்கும் புறம்பான செய்கையாகும் என்பதை அவர்கள் உணர்வது நல்லது.

மக்களுக்கு நல்லது செய்ய வேண்டுமென்று ஏற்படுத்தப்பட்ட மன்றங்களில், கூச்சலும் குழப்பமும் விளைகிறது என்பது, மக்கள் வரிப் பணம் பாழாகிறது என்பதாகும்!

'நகர பிதா'க்களிடையே அதிகமான பொறுப்பு; நேர்மையான போக்கு காணப்பட வேண்டும்; இல்லையேல், சென்னை மக்கள், 'தங்கள் நன்மைக்கும் முன்னேற்றத்திற்கும் சென்னை நகரசபை இயங்கவில்லை' என்று எண்ணுவார்களென்பதில் சந்தேகமில்லை!

பேச்சுப் போட்டி

14—8—54ல், மயிலை கலைக் கழகச் சார்பில் நடந்த தமிழ்ப் பேச்சுப் போட்டியில் கலந்து கொண்ட பல கல்லூரிகளில், சர். தியாகராயக் கல்லூரி மாணவத் தோழர் செ. பிரசன்ன மதன் முதலாவதாக வெற்றி பெற்றார்.

பீகார் வெள்ளம்

50 லட்சம் பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்!

சமீபத்தில் பீகாரில் ஏற்பட்ட வெள்ளம் சுமார் 50 லட்சம் பேர்களை பாதித்துள்ளதாம்.

1934-ல் பீகாரில் ஏற்பட்ட பூமி அதிர்ச்சியினால் விளைந்த சேதங்களைக் காட்டிலும் பன்மடங்கு சேதங்கள் விளைந்துள்ளனவாம்.

கடந்த 30 ஆண்டுகளைக் காட்டிலும் அதிகமான விளைச்சலிருக்கும் என்று எதிர்பார்த்த ஏராளமான சோளப் பயிர்கள் நாசமடைந்து விட்டனவாம்.

கோசி நதியும் அதன் கிளைகளும் கட்டுப்படுத்தப்பட்டால், இந்தச் சேதங்கள் ஆண்டுதோறும் தொடர்ந்து நிகழாமல் பார்த்துக் கொள்ள உதவி செய்ய முடியும் என்று மத்திய மந்திரி ஒருவர் கூறுகிறார்.

மத்திய அரசாங்கம் வேண்டியளவு உதவி செய்து வருகிறது.

பீகாரில், அஸ்ஸாம், மேற்கு வங்கம், ஐக்கிய மாகாணம் ஆகிய மாநிலங்களில் வெள்ளத்தினால் உணவுப் பொருள்களுக்குப் பெரும் சேதங்கள் விளைந்திருந்தபோதிலும் நாட்டிலே போதுமான உணவுப் பொருள் இருப்பதாகப் பண்டித நேரு தெரிவித்திருக்கிறார்.

வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தேவையான உடைகள் தந்து உதவுமாறு, பெரும் செல்வ ஆலை முதலாளிகளை பண்டிதர் வேண்டிக் கொண்டிருக்கிறார்.

பெரியாறு நீர்த் தேக்கம்

திரு - கொச்சி—சென்னை உடன்பாடு!

திரு—கொச்சி, சென்னை அரசாங்கங்களிடையே பெரியாறு நீர்த் தேக்கத்திலிருந்து மின்சாரம் உற்பத்தி செய்துகொள்வது பற்றி இருந்த தகராறு, சுமூகமான ஒரு முடிவுக்கு வரக்கூடும் என்று தெரிகிறது.

திரு—கொச்சி, சென்னை ஆகிய இரு அரசாங்கங்களும் சேர்ந்து பெரியாறு நீர்த் தேக்கத்தை சமூகமுடன் ஏற்பட விதித்து, சென்னை அரசாங்கம் மட்டுமே தனித்து அணை கட்டுவது என்பதை, கொள்கை அளவில் சில பல நிபந்தனைகளுடன் திரு—கொச்சி அரசாங்கம் ஏற்றுக் கொண்டு விட்டதாகத் தெரிகிறது.

இத் தகவலை வெளியிட்ட மராமத்து இலாகா மந்திரியான இராமநாதபுரம் ராஜா, சீக்கிரமே அணைக் கட்டும் வேலைகளை சென்னை அரசாங்கம் துவங்கும் என்று குறிப்பிட்டார்.

நீர்த் தேக்கத்திலிருந்து உற்பத்தி செய்யப்படுகிற மின்சாரம் முழுமைக்கும் அதிகமான விகிதத்தில் பணம் தரவேண்டுமெனக் கோரி திரு—கொச்சி சர்க்கார் சென்னை அரசாங்கத்திற்குக் கடிதம் அனுப்பி உள்ளதாகவும், அந்த விஷயம், சம்பந்தப்பட்ட இலாக்காவின் பரிசீலனையில் இருப்பதாகவும் மந்திரி கூறினார்.

சித்தூர் மாவட்ட எல்லைப் பகுதிகள்

ஆந்திரர் கருத்தறிவிக்கிறார்கள்!

திருப்பதி, ஆக. 18—

சென்னை உயர் நீதிமன்ற முன்னாள் நீதிபதி பி. சோமய்யா எலவனை, ஆந்திர அரசாங்கம், சித்தூர் மாவட்ட எல்லைப் பகுதிகள் பற்றிய தங்கள் கருத்தை, ராஜ்ய புனரமைப்புக் குழுவினரிடம் எடுத்துக் கூறுமாறு கேட்டுக் கொண்டிருக்கின்றனர் எனத் தெரிகிறது.

வெடிகுண்டுகள் திருடப்பட்டன!

கலகக்காரர்களின் வேலையா?

சிங்கப்பூர் விமானத் தளத்தில் காவல் பலப்படுகிறது

சிங்கப்பூருக்கு அருகே உள்ள டெங்கா ராயல் விமான தளத்திலிருந்து 69 குண்டுகள் திருட்டுப் போயின என்று தெரிகிறது. திருட்டுப் போயிருக்கும் இந்தக் குண்டுகள், சிங்கப்பூர் நகர் பூராவையும் அழிப்பதற்குப் போதுமானதாகும் என்று அதிகார பூர்வமாக அறிவிக்கப்படுகிறது.

இவைகளில் விமான தளத்திற்கு அருகே பத்து குண்டுகள் அப்படியே கிடந்தன என்று தெரிகிறது. மற்ற குண்டுகளில் உள்ள முக்கியப் பகுதிகள் அனைத்தும் அகற்றப்பட்டு, வெறும் 'ஓடு'கள் மட்டும் கிடைத்தனவாம்.

காணாமற் போன குண்டுகள் பற்றி போலீசார் புலன் விசாரணை செய்கின்றனராம்.

கலகக்காரர்கள் மீது தினந்தோறும் தாக்குதல் நடத்தவே இந்தக் குண்டுகள் சேமித்து வைக்கப்பட்டிருந்தன என்று தெரிகிறது.

டெங்கா விமான நிலையத்தில் பாதுகாப்பு ஏற்பாடுகள் மிகவும் பலப்படுத்தப்பட்டிருக்கின்றன என்று தெரிகிறது.

கடந்த சில மாதங்களாக இந்த குண்டுகள் சிறிது சிறிதாக திருடப்பட்டன என்று தெரிகிறது.

சோவியத் — பர்மா வர்த்தக ஒப்பந்தம்

விரைவில் அமுலாகக் கூடும்!

ரங்கூன், ஆக. 17—

சோவியத்—பர்மிய நாடுகளிடையே வர்த்தக ஒப்பந்தம் ஒன்று நிறைவேறுவதற்கான பேச்சுவார்த்தைகள் முடியும் தருவாயிலிருப்பதாக, பர்மா மக்கள் சபையில் அறிவிக்கப்பட்டது.

சோவியத், கம்யூனிஸ்டு சீனா ஆகிய நாடுகளுக்கு பர்மிய கலைவல்லுனர்கள் அனுப்பப்படுவரா—இங்கிலாந்து அமெரிக்கா ஆகிய நாடுகளுக்கு அனுப்பப்பட்டது போன்று—என்று கேட்கப்பட்டபோது, அம்மாதிரி கலைவல்லுனர்களை அந்த நாடுகளுக்கு அனுப்புவதில் சர்க்காருக்கு எந்த விதத ஆட்சேபமும் இல்லை என்றும், அந்த நாட்டுக் கலைகளையும் பண்பாடுகளையும் அறிந்து கொள்வதில் மொழி வேறுபாடு பெரும்பான கஷ்டத்தைத் தருவதாயிருக்கிறது என்றும் பதிலளிக்கப்பட்டதாகத் தெரிகிறது.

தேங்காய்க்குள் பாம்பு

கோலாலம்பூர், ஆக. 18—

இங்குள்ள கிராமம் ஒன்றில் ஒரு தேங்காய்க்குள் மூன்றடி நீளமுள்ள பாம்பு ஒன்று காணப்பட்டது.

ஒரு போலீஸ்காரரின் மகன் தேங்காயை உடைக்க முயன்றபோது, தேங்காய்க்குள் பாம்பு இருப்பதைக் கண்டு பயந்து, தேங்காயை பூமிக்குள் புதைத்து விட்டாராம். பின் அவரது தந்தை வந்து தேங்காயைத் தோண்டி எடுத்து உடைத்ததில் அதில் மூன்றடி நீளமுள்ள பாம்பு இருந்ததைக் கண்டாராம்.

இது இங்குள்ள மக்களிடையே பரபரப்பை உண்டுபண்ணியுள்ளது.

பிறப்பு

8—8—54 மாலை 6-20 மணியளவில் மேட்டூர் இல்லத்தில் தோழர் பி. எம். பி. கந்தசாமியின் வாழ்க்கை அணிவியாருக்கு பெண் மகவு பிறந்து, தாயும்—சேயும் நலம்.

பட்டினியால் வாடுகிறோம்

நாட்டில் பலருக்கு வேலையில்லை

கவர்னருக்கு ஏன் பத்து லட்சம்?

நலிந்துபோன மக்களின் கேள்வி!

ஐயா,

குடியரசு முறையில், குடியரசு சர்க்கார் இயங்க வேண்டும் என்ற நோக்கத்தோடு அமைக்கப்பட்டிருக்கும் அரசியல் சட்டத்தின் கீழ், ஜனாதிபதி, கவர்னர் பதவிகளும், அப்பதவிகள் வாழ மக்களின் வரிப் பணம் கொட்டப்படுவதும் சிந்திக்க வேண்டியதோர் பிரச்சினையாகும்.

குடியரசு நாட்டில் எங்கு பார்த்தாலும் பசி, பட்டினி, வேலையில்லாத் திண்டாட்டம் என்ற சொல்லைத் தவிர, வேறு எந்தச் சொல்லையும் கேட்க முடியவில்லை. இந்நிலையில் ஒரு தனிப்பட்ட மனிதருக்கு ஆண்டு ஒன்றுக்கு பத்து இலட்சம் ரூபாய் சம்பளம் என்றால், அது பட்டப் பகலில் செய்யும் பகிரங்க பகற் கொள்ளையே ஆகும். இதற்காக ஓர் போராட்டம் தேவைதான்.

மு. குருசாமி,
சோழவந்தான்.

★

ஐயா,

நம் நாட்டில் எங்கு காணினும் பசி, பஞ்சம், பட்டினிச்சாவு, வறுமை, இல்லாமை போன்ற பயங்கர விளைவுகள் எழக்காரணமென்ன? வளமார் நாட்டை வடநாட்டு பார்ப்பனமாக்க வஞ்சகர்கள் கையாளும் சூழ்ச்சிமுறைகளிலே தலை சிறந்தது சான்றல்! அதற்கு அத்தாட்சி கவர்னர் சம்பளம்! சுமார் 10 லட்சம், பறிபோகிறது வடநாட்டிற்கு!

எனவே, கவர்னர் சம்பளத்தைக் குறைப்பதுதான் முறை; நல்ல நீதி. திராவிட முன்னேற்றக் கழகம் இதுவரை வெற்றியின்றி தோல்வியைக் கண்டதில்லை. இப்போராட்டத்திற்கு ஆயிரமாயிரம் வீரர்களின் பட்டாளம் படை வரும் என்பதற்கு ஆயிரமாயிரம் அறிகுறிகள் தோன்றுகின்றன. வெற்றி நிச்சயம் நமக்குண்டு!

கோ. இராஜஜெயகரன்,
ஆரணி, பொன்னேரி வட்டம்.

★

ஐயா,

இந்திய யூனியன் என்று கூறிக்கொண்டு, பொது மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மந்திரி சபை நடத்தி, குடியரசு தினம் கொண்டாடி, சுதந்திர நாடு—மக்கள் ஆட்சி என்று விளம்பரப் படுத்தப்பட்டு நடந்துவரும் இந்த ஆட்சியில் பிரதம மந்திரியும், ஜனாதிபதியும் இருக்கும்பொழுது மாநிலங்களுக்கு மட்டும் கவர்னர் என்ற ஒருவரை நியமித்திருப்பது ஏன்?

அன்று அறிவித்த போராட்டம் துவக்கப்பட்டால், அதை, 'கவர்னர் சம்பளக் குறைப்புப் போராட்டம்,' என்பதற்குப் பதிலாக, 'கவர்னர் பதவி ஒழிப்பு' போராட்டமாக துவக்குவது மிகவும் நலமும்—நம் திராவிட நாடு போராட்டத்திற்கு அஸ்திவாரமுமாக அமையும்.

ரா. அருணாசலம்,
கடத்தூர்.

★

ஐயா,

கவர்னர், ஒரு நாளில் வாங்கும் சம்பளம திராவிடத் தொழிலாளி ஒரு மாதம் பூராவும் உழைத்தாலும் கிடைப்பதில்லை. சொந்த நாட்டாருக்கு கஞ்சிக்கு வழியில்லை; ஆனால் வந்த வடநாட்டு கவர்னர் கேளிக்கைக்காக ஏன் நம் வரிப்பணம் விரயம் செய்யப்படுகிறது?

போராட்டத்தை விரைவில் கவனிக்கும்படி வேண்டுகிறோம்.

மறைமணி,
வேதாரணியம்.

ஐயா,

பசிக்குச் சோறில்லையே என்று கதறியழும் ஏழைகள் நிறைந்த இந்த நாட்டில், பத்து லட்சம் ரூபாய், கவர்னருக்கு ஆண்டுதோறும் கொட்டப்படுகிறது.

உடல் வியர்வை நிலத்தில் விழ உழைக்கும் உழவனுக்கு உண்ண உணவில்லை! கல்லையும் மண்ணையும் தன் கடின உழைப்பால் பொன்னாக்கும் தொழிலாளிக்கு இருக்க வீடில்லை! மனித முன்னேற்றத்திற்குத் தேவையான கல்வியறிவு கற்பிக்கும் ஆரம்பப் பாடசாலை ஆசிரியர்களது அல்லல் தீர்ந்தபாடில்லை!

பத்து லட்சம் ரூபாய்! பாட்டாளி, கனவிலும் கற்பனையிலும் கூட காண முடியாத தொகை! தொழிலாளிக்குத் தினம் கிடைப்பதை, பத்து லட்சம் தடவை பெருக்கினால்கூட நெருங்க முடியாத தொகை! அது அள்ளிக் கொடுக்கப்படுகிறது, வேலையேதும் செய்யாது நிற்கும் ஒரு கவர்னருக்கு! 'இது நீதியா? நியாயமா?'—என்று கேள்விக் குறி போட்டு, போர் தொடுக்க மார் தட்டி நிற்கும் தி. மு. கழகத்தைப் பாராட்டுகிறேன்.

'கனம்' நேருவின் ஆட்சியிலே இதுவும் நடக்கும், இன்னமும் நடக்கும்—பத்தல்ல, பதினைந்து லட்சமும் கொடுக்கப்படும்! அப்படிப்பட்ட ஆட்சி முறை நமக்கு வேண்டாம் என்பதுணர்ந்து, தனி நாடு—திராவிட நாடு கேட்கும் தி. மு. கழகம் தொடுக்கப் போகும் 'சம்பளக் குறைப்புப் போராட்டம்' கண்டிப்பாகத் தேவை! அதுவும் விரைவில்!

இரணியல் - சரோஜா
(தி. த. நா. கா. தலைவர்
பி. ராமசாமி அவர்களின்
மகள்)

★

ஐயா,

வடநாட்டின் அதிகார வர்க்கத்திற்கு அடிவருடியான கவர்னருக்கு ஆண்டுதோறும் பத்து லட்சம் ரூபாய் அபிஷேகம்! இந்நாட்டுச் சொந்தக்காரர்கள் பஞ்சத்தால், பசியால் பரிதவித்து வாடும்போது வெறுமனே வீற்றிருக்கும் ஒருவருக்கு இவ்வளவு ரூபாயைக் கொடுப்பது நேர்மையானதல்ல. படித்தும் பட்டம் பெற்ற இளைஞர்கள் வேலையின்றி கஷ்டப்பட்டு கண்ணீர் விடும் போது ஏன் இந்த வீண்செலவு?

அன்று நாவலர் சொன்னதால் நாங்களும் போராட்டத்தில் குதிக்கத் தயார்!

க. கணபதி,
அரங்க. இராவணன்,
தவரக்குறிச்சி

★

ஐயா,

கவர்னர் சம்பளத்தைக் குறைப்பதற்கு, இந்திய அரசியல் சட்டம் இடம் தருகிறதா, இல்லையா என்பதுபற்றி நமக்குக் கவலையில்லை; இன அடிப்படையில் தனி நாடு கேட்கும் ஒரு இயக்கம், மக்கள் நலனுக்காக சில அமைதியான போராட்டத்தை ஆரம்பித்தால்—அதை அடக்கலாம் என்று ஆதிக்கக்காரர்கள் எதிர்த்தால், சட்டம் சரியுமே தவிர, போராட்ட வீரர்கள் பின்வாங்க மாட்டார்கள். மக்கள் வரிப் பணத்தில் ஆண்டுதோறும் 10 லட்சம் ரூபாயை வடநாட்டு கவர்னர் அள்ளிக் கொண்டு போனால், குறையுள்ள இந்திய அரசியல் சட்டத்தைப் பார்த்துக் கொண்டிருப்பது தான் ஒரு விடுதலை இயக்கத்தின் பணியா? இல்லவே இல்லை.

கே. சுப்பிரமணி,
சென்னை—12.

சீனக் கடற்கரையில் அமெரிக்கரின் யுத்த முஸ்தீபு

போர்க் கப்பல்களும், விமானங்களும் குவிகின்றனவாம்!

சீன செய்தி நிறுவனம் தரும் தகவல்

லண்டன், ஆக. 19—
அமெரிக்க விமான, கப்பல் படைகள், சியாங்-கே-ஷேக்கின் எஞ்சியுள்ள அரும்புக்களுடன் சீனக் கடற்கரையில் உள்ள சேகியாங் என்னும் மாகாணத்தின் கிழக்கும் பகுதியினுள் அத்துமீறி நுழைந்துள்ளதாக நவசீன செய்தி நிறுவனம் அறிவித்துள்ளதாகத் தெரிகிறது.

அந்தச் செய்தி நிறுவனத்தின் அறிவிப்பில், மேலும், நூற்றுக்கணக்கான அமெரிக்க விமானங்கள் 40-க்கு மேற்பட்ட தடவைகளில் சியாங் வசமுள்ள தாசேன் தீவைச் சுற்றி வட்டமிட்டுக் கொண்டிருந்ததாயும், அமெரிக்காவின் பலதரப்பட்ட போர்க் கப்பல்கள் சேகியாங் மாகாணக் கடற்கரைக்கு அப்பால் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்ததாயும் கூறுகிறது.

இந்த நடவடிக்கைகளில் தாசேனில் உள்ள அமெரிக்க இராணுவக் கப்பல் படை ஆலோசகர்கள் ஈடுபட்டிருந்தார்கள் எனவும், இந்த ஆயுத நடவடிக்கைகள் எல்லாம் சீன மக்களின் கோபத்தைத் தூண்டுவனவாயிருக்கின்றன என்றும் அந்தச் செய்தி நிறுவனம் கூறுகிறது!

★

பார்மோசாவைப் பாதுகாக்க அமெரிக்க கப்பற்படையால் முடியாது

முன்னாள் யு. எஸ். ராணுவ அதிபர் தரும் விளக்கம்

ஒமாகா, ஆக. 19—
"பார்மோசா தீவு, மக்கள் சீனாவால் தாக்கப்பட்டால் அங்குள்ள அமெரிக்காவின் ஏழாவது கடற்படை தாக்குதலைச் சமாளிக்க இயலாது,"

என்று, பசிபிக்கில் நேச நாடுகளின் முன்னாள் விமானப் படை அதிகாரி ஜெனரல் ஜியார்ஜ் கென்னி கூறினார்.

அமெரிக்க ஜனாதிபதி ஐசனோவர், சில நாள் முன்பாக, பார்மோசாவை சீனா தாக்குவதினின்றும் அமெரிக்காவின் 7-வது கடற்படை தடுக்கும் என்று குறிப்பிட்டிருந்தார் அல்லவா? அதைப்பற்றி ஜெனரல் கென்னி கருத்தறிவிக்கையிலேயே அவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறினார்:—

"மூன்றாவது உலக யுத்தத்தின் முதல் முனையாக, பார்மோசா இருக்கக் கூடும்; அமெரிக்காவின் ஏழாவது கடற்படை இருந்தாலும், அத்தீவை ஒரு போரின் சீனா வெற்றி பெறும் என்ற முழு நம்பிக்கை அதற்கிருக்கிறது;

"உலகத்திலேயே நான்காவதான மிகப் பெரிய விமானப் படையை மக்கள் சீனா உருவாக்கியுள்ளது. 500 முதல் 1000 வரை ஜெட் போர் விமானங்கள் சீனாவிடம் இருக்கின்றன;

"வட கொரியர்களுக்கு சோவியத் ரஷ்யா போர் விமானங்கள் அனுப்பிய வழியிலேயே சீனாவுக்கு நீர்மூழ்கிக் கப்பல்களும் நிறையக் கிடைக்கக் கூடும்."

கட்சிக் காவலியின் குடிமக்களாகப் பதிவு செய்து கொள்ளப் பட மாட்டார்கள் என்றும் அறிவிக்கப்பட்டது.

ஐதராபாத் நகரில் 144 தடைச் சட்டம்!

பாக். கொடி ஏற்றப்பட்டதின் எதிரொலி

ஐதராபாத், ஆக. 19—
ஐதராபாத் நகரை அடுத்த கோஷமகால் எனும் இடத்தில் பாக். கொடி பறக்கவிடப்பட்டதின் விளைவாக சிறிய கலகம் ஏற்பட்டது. போலீசார் தலையிட்டு அமைதியை நிலைநாட்டி உள்ளனர்.

இதற்கிடையில் 144 தடைச் சட்டத்தைப் பிரயோகித்து நகரில் யாரும் கூட்டம் கூட்டவோ, ஊர்வலம் நடத்தவோ கூடாதென ஐதராபாத் நகர போலீஸ் கமிஷனர் உத்தரவு பிறப்பித்துள்ளார் எனத் தெரிகிறது.

சுதந்திர தினத்தன்று காந்தி பஜார் பகுதியில் பாக். கொடி ஏற்றப்பட்ட சம்பவம் குறித்து விசாரணை நடப்பதாகவும், அதற்கிடையில் பொதுமக்கள் கவலை கொள்ளத் தேவை இல்லை என்றும் கமிஷனர் அறிவித்துள்ளார்.

1700 கிராமபோன் கம்பெனி தொழிலாளர் வேலை நிறுத்தம்!

கல்கத்தா, ஆக. 19—
கல்கத்தாவில் உள்ள, டம்டம் கிராமபோன் கம்பெனி ஒன்றில் வேலை செய்யும் 1,700 தொழிலாளர்கள், நியாயமான சம்பளம் கோரியும், உற்பத்தி 'போனஸ்' கோரியும் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர்.

சிங்கப்பூர் இந்தியர்கள்

சிங்கப்பூர், ஆக. 17—
மலேயாவிலிருக்கும் இந்தியா, பாகிஸ்தான், சிலோன் ஆகிய நாட்டு மக்கள் இன்னமும் தங்களை இங்கிலாந்து நாட்டுக் காலனிக் குடிமக்களாகப் பதிவு செய்து கொள்ளவில்லை என்றும், அப்படிப் பதிவு செய்து கொள்வதற்காகத் தரப்பட்டிருந்த கால வரம்பு நீடிக்கப்பட்டிருக்கிறதென்றும் சிங்கப்பூர் சட்டசபையில் அறிவிக்கப்பட்டது.

எப்படி இருப்பினும், முன்னாள் இந்திய மாநிலங்களில் பிறந்தவர்கள், அவ்வாறு, இங்கிலாந்து

காமன்வெல்த் இராணுவத் தளபதிகள்!

பிரிட்டன், இன்னும் காமன்வெல்த் நாடுகளைச் சேர்ந்த 100 இராணுவத் தளபதிகள், காமன்வெல்த் நாடுகளின் இராணுவங்களிடையே கூட்டுறவை வளர்ப்பது பற்றி ஆலோசிப்பதற்காக, மாநாடு கூடியுள்ளனர். இந்த மாநாடு மூன்று நாட்கள் நடைபெறும் எனத் தெரிகிறது.

கழகக் கூட்டங்கள்

★

தொட்டம்பாளையம்

தி.மு.கழக முதல் ஆண்டு விழாப் பொதுக்கூட்டம்
அம்மன் கோயிலுக்கு எதிரிலுள்ள பாண்டியன் மைதானத்தில்
22—8—54 மாலை 6 மணிக்கு
பேசுவோர்:
எஸ். அப்பாவு
ஜி. என். ராஜூ
பி. எ. சாமிநாதன்

★

மூல்லைவாங்கல்

ஈஸ்வரன் கோவில் திடலில்
22—8—54 மாலை 5 மணிக்கு
தலைவர்: இரா. முருகநாதன்
பேசுவோர்:
மா. மாணிக்கம்
வை. வீழிநாதன்

சேலம் வட்ட தி. மு. கழக தோழர்கட்கு

22—8—54 பிற்பகல் 2-30 மணிக்கு சேலம் வட்ட தி. மு. கழகச் சுமிட்டிக் கூட்டம் காரிபட்டி முராரி பங்களாவில் நடைபெறும். சேலம் வட்டக் கிளை உறுப்பினர்கள் யாவரும் கலந்துகொள்ளுமாறு கோரப் படுகின்றனர். தோழர்களுக்கு உணவு வசதியும் செய்யப்பட்டிருக்கிறது.

பாலக்காடு தி. மு. கழகத் தோழர்கட்கு

22—8—54 மாலை 3 மணிக்கு பட்டிக்காரையிலுள்ள தி. மு. கழகக் கட்டிடத்தில், தி. மு. கழக உறுப்பினர்கள், ஆதரவாளர்கள், அனுதாபிகள் சேர்ந்த பொது உறுப்பினர் கூட்டமும், நிர்வாகிகள் தேர்தலும் நடைபெறும்.

குறிப்பு:—தி. மு. கழகத்தில் உறுப்பினராகச் சேர விரும்புபவர்கள் அனைவரும், மேலே குறிப்பிட்ட நேரத்துக்கு முன்னதாகவே கழகக் கட்டிடத்துக்கு வந்து தங்கள் பெயர்களைப் பதிவு செய்துகொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

சொற் பயிற்சிக் கூட்டம்

21—8—54 இரவு 8 மணிக்கு சென்னை 50-ம் வட்ட தி. மு. க மனையில் தோழர் இராதா தலைமையில் 'எதிர்காலம்' என்பது பற்றி சொற் பயிற்சிக் கூட்டம் நடைபெறும்.

* * *

22—8—54 காலை 10 மணிக்கு சென்னை முத்தியாலுப்பேட்டை நெ. 17, சாமி பிள்ளையார் கோயில் தெரு முத்தமிழ் மன்றத்தில் தோழர் என். ராமநாதன் தலைமையில் 'உழவும் உழைப்பும்' என்ற தலைப்பில் பல தோழர்கள் பேசுவர்.

* * *

22—8—54 மாலை 6 மணிக்கு நாகை தி. மு. கழகக் கட்டிடத்தில் அறிஞர் சொற்பயிற்சி மன்ற சார்பில் தோழர் பாண்டியன் தலைமையில் 'உலகை திருத்திய உத்தமர்கள்' எனும் பொருள் பற்றி பலர் பேசுவர்.

பொதுக்கூட்டம்

22—8—54 மாலை 6 மணிக்கு பெங்களூர் சிடி, சிக்க லால் பாக்கில், முரசொலி மன்றச் சார்பில் தோழர் என். வி. பதி தலைமையில் தோழர்கள் க. ந. இராமநாதன், திருவண்ணாமலை ப. உ. சண்முகம் ஆகியோர் பேசுவர்.

'இரத்தக்கறை'—நாடகம்

22—8—54-ல், தூத்துக்குடி டெல்பின் தியேட்டரில், திராவிட இன எழுச்சி நடிகர் கழக நிதிக்காக, தோழர் பி. எஸ். கலியாணசுந்தரம், தோழியர் பி. எஸ். செல்லா நடிக்கும் 'இரத்தக் கறை' நாடகம் நடைபெறும்.

பத்திரிகைகள் மீது செங்கல்வராயன் சீற்றம்!

சபையின் சலுகையை மீறியதாக கூறுகிறார்

சென்னை நகரசபை ஒத்திவைப்புக் கூட்டத்தின் எதிரொலி

தி மு.க. பொதுச்செயலாளர்

அண்ணாதுரை

சுற்றுப்பிரயாண நிகழ்ச்சி

★

28—8—54: திருவெண்ணெய் நல்லூர் மாலை 6 மணிக்கு தி. மு. கழகப் பொதுக் கூட்டம்
29—8—54: கல்லக்குடி மாலை 6 மணிக்கு தி. மு. கழக ஆண்டு விழாப் பொதுக் கூட்டம்
30—8—54: காலை முசிரி திருமணம்; மாலை 6 மணிக்கு திருச்சி தி. மு. கழகப் பொதுக்கூட்டம்
31—8—54 துறையூர் மாலை 6 மணிக்கு திருச்சி தி. மு. கழக ஆண்டு விழாப் பொதுக்கூட்டம்

கண்ணதாசன் சுற்றுப்பயணம்

20—8—54: எச். யூ. சி. கன்னிகுளம், சென்னை
21, 22—8—54: காஞ்சிபுரம் மாநாடுகள்
29—8—54: காலை: செட்டிகுளம் திருமணம்; மாலை: வேலூர்
4—9—54: லால்குடி
5—9—54: திருச்சி
9—9—54: சிந்தாதிரிப்பேட்டை
11, 12-9-54: நெல்லை மாவட்ட மாநாடுகள்
18—9—54: எழும்பூர்

கால்வாய் நீர் தகராறு

பாகிஸ்தான் யோசிக்கிறது!

மேற்கு பாகிஸ்தான் மாகாண முதல் மந்திரியும், பாக். மத்திய மந்திரி சபையினரும், இந்தியா—பாக். ஆகிய நாடுகளிடையே உள்ள கால்வாய் நீர் தகராறுகளின் பல்வேறு அம்சங்கள் பற்றி விவாதித்தனர் எனத் தெரிகிறது.

பாகிஸ்தானின் எல்லை மாகாண முதல் மந்திரியையும், பாக். மத்திய மந்திரி சபையினரையும் கொண்ட மாநாடு ஒன்று விரைவில் நடைபெறும் எனவும் அறிவிக்கப்படுகிறது.

சென்னைத் திருவள்ளுவர் கழகம்

21—8—54 மாலை 6½ மணிக்கு சென்னை, புரசை பெரியசாமி, அன்னதான சமாச மண்டபத்தில் தோழர்கள் முத்து, இராசாக்கண்ணனார் ஆகியோர் 'திருவள்ளுவரும் குடும்பமும்' என்பது பற்றிப் பேசுவார்கள்

திருமணம்

22—8—54 காலை 9 மணியளவில், பொம்மலூர் வட்டம் ஒரு ஊரில் தோழர் ஏ. கோவிந்தசாமி, எம். எல். ஏ., அவர்கள் தமையனார் மகன் தோழியர் ச. சுசீலா—தோழர் ஆனைமுத்து திருமணம் புலவர் வை. பொன்னம்பலனார் தலைமையில் நடைபெறும்.

சென்னை, ஆக. 19—
கடந்த செவ்வாய்க் கிழமையன்று எவ்வித காரணமுமின்றி திடீரென சென்னை நகர சபை கூட்டம் ஒத்திவைக்கப்பட்டது பற்றிய எதிரொலி, இன்று நடைபெற்ற நகர சபை கூட்டத்தில் கேட்டது.

கமிஷனர் அதிகாரியின் நியமனம் பற்றி எழுந்துள்ள பிரச்சினை குறித்து சென்னையில் உள்ள பத்திரிகைகள் நேர்மையற்ற முறையிலும், ஆட்சேபகரமான முறையிலும் வெளியிட்டு, சலுகையை துஷ்பிரயோகம் செய்ததாக டி. செங்கல்வராயன் ஒரு பிரச்சினையைக் கிளப்பினார்.

இது சபையின் கௌரவத்தையும், அந்தஸ்தையும் பாதிக்கக்கூடிய முக்கிய விஷயமாக இருக்கிறதென்றார்.

தோழர் வி. இராகமன்னார் இக்கூட்டத்தில் குறுக்கிட்டுப் பேசுகையில், சலுகை துஷ்பிரயோகம் எவ்விதமான பத்திரிகைகளில் செய்யப்பட்டதென்பதை விளக்க வேண்டுமென்றும், ஆங்கிலப் பத்திரிகையா, தமிழ் இதழா என்று தெரிவிக்க வேண்டுமென்றும், இதற்கு பெயரைக் குறிப்பிடாமல் 'ஆகாயத்தில் பறப்பது' போல பேசுவதில் பயனில்லை என்றும் கூறினார்.

சலுகை துஷ்பிரயோகம் செய்யப்பட்டிருப்பதாக உறுப்பினர் நினைத்தால், இதுபற்றி பிரேரணை ஒன்று கொண்டு வந்திருக்க வேண்டுமென்றும், அப்படிச் செய்யாமல் இவ்விஷயமாய் இவ்வளவு நேரம் உறுப்பினர் பிரசங்கம் செய்தது நியாயமா என்றும் கேட்டார்.

செங்கல்வராயன் மேலும் பேசுகையில், கூறியதாவது:—

"ராகமன்னாருக்கு எல்லாப் பத்திரிகைகளையும் படிக்கும் பழக்கம் உண்டென்று நான் நினைத்திருந்தேன். அவசியமில்லாத காரணத்தால், எந்தப் பத்திரிகை துஷ்பிரயோகம் செய்தது என்பதை நான் தெரிவிக்க விரும்பவில்லை; மேலும் உங்களையோ (மேயர்) அல்லது இச்சபையையோ, மேற்படி பத்திரிகை மீது நடவடிக்கை எடுக்கும்படி நான் வற்புறுத்தப் போவதில்லை; மேற்படி பத்திரிகை எந்தவிதமான குறை கூறி உள்ளது என்பதையும், நான் தெரிவிக்கப் போவதில்லை. ஆனால் இச்சபையின் மெம்பர்களைப் பற்றியும், சபையைப் பற்றியும், அப்பத்திரிகை குறைகூறி இருப்பது நியாயமானதா, நேர்மையானதா என்று மட்டும் நான் கேட்கிறேன்," என்றார்.

எம். ஏ. சுரீம் பேசுகையில், சபையில் என்ன நடக்கிறதென்பது 'தலைவர்கள் புரியவில்லை' என்றும், எந்தப் பத்திரிகை துஷ்பிரயோகம் செய்ததென்பதைக் குறிப்பிட வேண்டுமென்றும் கூறினார். எந்தப் பத்திரிகையிலும் அந்தமாதிரி துஷ்பிரயோகச் செய்தி காணப்படவில்லையே என்றார்.

திராவிட முன்னேற்றக் கழகத் அமைப்பாளர் தோழர் இராம இலக்குமணன், சாம். ஏ. அவர்கள், அறுபத்து இரண்டு பேர்களைக் (ஏழு, ஆறு) கொண்டு தொகுத்து) வெளியிடப்பட்டிருக்கிறது. ஆசிரியர்: வி. என். அண்ணாதுரை